**ஹோமியோபதி வைத்திய சபை - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

ஹோமியோபதி வைத்திய சபையின் 2022திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுமற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று,உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றுமற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானகாசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2022திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும்,1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின்2022 திசெம்பர்31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நிய-ாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்குஉள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின்தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 1இன் 80ஆம் பந்தியின் பிரகாரம் நிதி நிலைமைக்கூற்று தயாரிக்கும் போது ஒரு ஆண்டிற்குக் குறைந்த காலப் பகுதியொன்றில் தீர்த்துவைப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட பொறுப்புக்கள் மாத்திரம் நடைமுறைப் பொறுப் புக்களின் கீழ் வகைப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு இணங்காத வகையில் பணிக்கொடைக் கொடுப்பனவுகளுக்கான ஒதுக்கீடுகளின் மொத்தப் பெறுமதியான ரூபா 3,091,142 நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்தத் தவறு 2023ஆம் ஆண்டில் இறுதிக் கணக்கின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட கிரயம் ரூபா 7,547,721 ஆன கட்டிட புனரமைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்காக நிதிக் கூற்றுக்களில் பெறமானத் தேய்வு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் சரியாகக் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அமைச்சினால் மீளாய்வாண்டில் வைத்திய சபைக்காக பொறிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 971,349 ஆன அரசாங்கத்தின் மூலதன நிதி ஏற்பாடு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |
| (இ) | சுகாதார அமைச்சின் சுதேச மருத்துவ பிரிவின் தகவல்களின் பிரகாரம் வைத்திய சபையின் நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டில் செலவிடப்பட்ட அரசாங்கத்தின் மீண்டெழும் செலவினம் ரூபா 29,810,198 ஆக இருந்த போதிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 34,807,958 ஆனமை யால் ரூபா 4,997,760 அதிகரித்துக் காண்பிக்கப் பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | அமைச்சினால் மீளாய்வாண்டில் வைத்திய சபைக்காக 26 சந்தர்ப்பங்களின் போது செலவிடப்பட்ட ரூபா 1,451,562 ஆன செலவினங்கள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப் படாதிருந்ததுடன் அதன் காரணமாக அரசாங்கத்திலிருந்து கிடைத்த மீண்டெழும் நிதி ஏற்பாடு மற்றும் உரிய செலவினக் கணக்குகள் அப் பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட உறுதிச் சீட்டுக்களில் பெறுமதி சரியாக மீண்டெழும் செலவினத்தின் கீழ் இனங்காணப்படாமையின் காரணமாக ஏற்பட்டிருந்தமை மற்றும் 2023ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மேற்படி |
| (ii) | ஆண்டில் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்தப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 4,831,551 ஆன தொகை இரட்டைக் கணிப்பீட் டின் காரணமாக ஆண்டின் மீண்டெழும் ஏற்பாடு கள் மற்றும் பதவியணியினர் சம்பளம் மற்றும் படிகள் அப்பெறுமானத்தால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்தப்பட்ட தொகை மாதாந்தம் சரியாகக் கணிப்பிடப்பட்டு கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் கணக்குகளைப் பரீட்சிக்கும் போது இரட்டைக் கணிப்பீடு ஏற்பட்டிருக்கவில்லை. | மேற்படி |
| (iii) | ஐக்கிய இராச்சியத்தின் போதி சிகிச்சையினால் மருத்துவ சிகிச்சைகளை நடாத்துவதற்காக வைத்திய சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 760,000 மானியம் வருமானமாக தனியாக இனங் காணப்படாமல் அரசாங்கத்தின் மீண்டெழும் மானியமாக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 இன் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய் வதற்கு நடவடிக்கை எடுக்கப் படுமென குறிப்பிடப்பட்டுள்ளது. | மேற்படி |
| (iv) | ரூபா 271,585 கூட்டுத்தொகையான நிலுவை சம்பளம் செலுத்துதல் இரட்டைக் கணிப்பீட்டின் காரணமாக மீண்டெழும் நிதி ஏற்பாடு மற்றும் பதவியணியினர் சம்பளம் மற்றும் படிகள் அப்பெறுமானத்தால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | நிலுவை சம்பளம் செலுத்து வதற்குரிய மே மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் முறையே ரூபா 100,314.50 மற்றும் ரூபா 215,118.25 சம்பளம் செலுத்தும் கணக்கு மற்றும் அரசாங்கத்தின் மீண்டெழும் மானியம் உள்ளடக்கப்பட்டு கணக்காய்வு நிறுவனத்தின் சம்பளக் கணக்கு மற்றும் அதற்குரிய நாட்குறிப்பு பதிவு களின் பிரகாரம் இரட்டிக் கணிப்பீடு இடம்பெறவில்லை. | இரட்டைக் கணிப்பீடு ஏற்பட்டுள்ளது. சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | சட்டரீதியான நடவடிக்கைகளின் காரணமாக செலுத்தப்படாதிருந்த முன்னாள் பதிவாளரின் ரூபா 260,703 ஆன பணிக்கொடை பணம் செலவினமாகக் கருதி மீண்டெழும் ஏற்பாட்டு கணக்கில் செலவு வைத்து பணிக்கொடை செலவினக் கணக்கில் வரவு வைக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் மீண்டெழும் ஏற்பாடு மற்றும் பணிக்கொடை செலவினம் அப்பெறுமானத்தால் அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் கணக்காண்டில் அதனை சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2016 இன் 10 ஆம் இலக்க ஹோதியோபதி சட்டத்தின் | | | |
| (i) | 15 ஆம் பிரிவின் (ஈ) மற்றும் (உ) உப பிரிவுகள் | ஹோமியோபதி வைத்தியச் சபையால் ஹோமியோபதி நிறுவனத்தை ஸ்தாபித்து நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் ஹோமியோபதி மருத்துவ முறையில் சிகிச்சை அளிக்கும் ஹோமியோபதி நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கான குறைந்தபட்ச தரநிலைகள் தீர்மானித்து அதன் பிரகாரம் அந்த நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | ஹோமியோபதி நிறுவனம் ஸ்தாபித்தல் தொடர்பாக ஆரம்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் சுகாதார அமைச்சின் உள்நாட்டு மருத்துவ பிரிவுடன் ஹோமியோபதி நிறுவனம் ஸ்தாபித்தல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஹோதியோபதி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 31(1) உப பிரிவு | ஹோதியோபதி மருந்து கலப்பவர்களை பதிவு செய்வதற்கான ஒரு ஹோமியோபதி மருந்து கலப்பவர்களுக்கான பதிவேடொன்றைப் பராமரிப்பதற்கு நடவடிக்கை | விதிமுறைகள் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதுடன் எதிர்காலத்தில் கலப்பவர்களை பதிவு செய்தல் | மேற்படி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எடுக்கப்பட வேண்டிய போதிலும்,இந்த ஏற்பாடுகளை அமுல்படுத்துவதற்கான பிரமாணங்கள் வழங்காமையின் காரணமாக 2024 ஒக்டோபர் 21 வரையிலும் அவ்வாறான பதிவேடொன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்படும். | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் ஐஐ ஆம் அத்தியாயம் 16.1 ஆம் பந்தி | சேவையில் நிரந்தரமாக்குதல், பதவியுயர்வு மற்றும் வினைத்திறமைகாண் தடைப் பதவி உயர்வுப் பரீட்சை போன்ற பரீட்சைகள் குறிப்பிட்ட தினத்தில் நடாத்தப்படுவதற்கு நிறுவனத் தலைவர் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் 2014 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை ஆட்சேர்க்கப்பட்டிருந்த 04 பதவிகளுக்கான அதிகாரிகள் 30 பேருக்காக கணக்காய்வுத் திகதியாகிய 2024 ஒக்டோபர் 21 வரையில் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. இதன் காரணமாக சில உத்தியோகத்தர்களை சேவையில் நிரந்தரமாக்க முடியாதிருந்ததுடன் அவர்களது தகுதி காண் காலத்தினையும் நீடிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வினைத்திறமை காண் தடைப் பரீட்சையை நடாத்துவதற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதுடன் அதனை விரைவாக நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 133 | வைத்திய சபைக்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன் | சுகாதார அமைச்சின் மூலம் கணக்காய்வு மேற்கொள்வதற்கு நடவடிக்கை | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலமேனும் மீளாய்வாண்டிற்காக உள்ளகக் கணக்காய்வுமேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எடுக்கப்படும். | வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 395(இ) | வங்கிக் கணக்குகளில் ஒவ்வொரு மாதத்தின் கொடுக்கல் வாங்கல் நிலைமை தொடர்பாக அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் வங்கி இணக்கக்கூற்று தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்குரிய இலங்கை வங்கியின் இலக்கம் 0002026466 என்ற நடைமுறைக் வங்கிக் கணக்கு தொடர்பாக வங்கி கணக்கிணக்கக்கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வங்கி கணக்கிணக்கக்கூற்றுக்கள் உரிய காலத்தின் போது தயாரிப்பதற்கு பதிவாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | மேற்படி |
| (ஈ) | 2018 நவம்பர் 14 ஆந் திகதிய 02.∵.2018 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் அரச வங்கிகளில் பேணப்படுகின்ற கணக்கில் பணத்தை வைப்புச் செய்ய வேண்டியிருந்த போதிலும் 2009 ஆம் ஆண்டில் அறவிடப்பட்ட ரூபா 1,204,500 ஆன பாடநெறிக் கட்டணங்கள் தனியார் வங்கியில் சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்தக் கணக்கின் மீதி ரூபா 2,094,193 ஆக இருந்தது. 2022 நவம்பர் 30 ஆந் திகதிய இலக்கம் 6.2 என்ற நிர்வாக சபைத் தீர்மானத்தின் மூலம் இந்த சேமிப்புக் கணக்கு இரத்துச் செய்யப்பட்டு நிலையான வைப்பாக இலங்கை வங்கியில் வைப்புச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த வைப்பை இலங்கை வங்கியில் நிலையான வைப்பாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01.∴2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை யின் 6.6 ஆம் பிரிவு | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய் வாளர் தலைமை அதிபதிக்கு அங்கீகரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் வருடாந்த அறிக்கை யின் வரைவு என்பன சமர்ப்பிக்கப்பட வேண்டி யிருந்த போதிலும் 2022ஆம் ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் 17 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் தாமதத்துடன் 2024 ஆகஸ்ட் 23ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | ஹோமியோபதி வைத்திய சபையின் கணக்காளர் ஒருவர் காணப்படாமை, ஊழியர் வெற்றிடங்கள் காணப்பட்டமை மற்றும் ஹோமியோபதி வைத்திய சபையின் ஆயுட்காலம் முடிவடைந்த பின்னர் புதிய வைத்திய சபை ஸ்தாபிப்பதற்கு கணிசமான காலம் எடுத்தமையினால் இந்த தாமதங்கள் ஏற்பட்டிருந்ததுடன் எதிர் காலத்தில் குறித்துரைத்த காலத்தில் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும். | அரச நிருவாக சுற்றறிக்கைகளு க்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 900,779 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 312,581 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,213,360 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மீளாய்வாண்டின் ஏனைய வருமானம் ரூபா 3,234,645 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொதுமக்களிடம் பணம் சேகரிப்பதற்காக அதிகாரமளிக்கப்பட்ட எவ்வித ஏற்பாடொன்றும் இல்லாமல் மற்றும் முறையான அங்கீகாரமின்றி ''ஹோமியோபதி நிதியம்''என்ற பெயரில் ஒன்று ரூபா 5,000 பெறுமதியுடைய உதவிப் பத்திரப் புத்தகங்கள் அச்சிடப்பட்டிருந்தன. அச்சிடப்பட்ட ஆண்டு, அச்சிடப்பட்ட | சுகாதார அமைச்சு மற்றும் மருத்துவ சபை ஒன்றிணைந்து குழுவொன்று ஸ்தாபித்து அந்த உதவி புத்தகங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல். | இந்த உதவிப் பத்திரப் புத்தக இருப்புக்கள் அகற்றப்பட்டு நீக்கப்படுதல் விரைவில் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மொத்த உதவிப் பத்திரங்களின் எண்ணிக்கை, உதவிப் பத்திரங்களின் விற்பனை வருமானம் மற்றும் அப்பணம் வங்கியிலிடப்பட்டமை தொடர்பான தகவல்கள் எதுவும் சபையிடம் காணப்படவில்லை. மிகக் குறைந்த புத்தக இலக்கம் மற்றும் அதிகமான புத்தக இலக்கம் என்பவற்றுக்கிடையே 159புத்தகங்கள் பற்றாக்குறையாகக் காணப்பட்டதுடன் அவற்றில்சேகரிக்கப்பட முடியுமாகவிருந்த மொத்தப் பணம் ரூபா 795,000 ஆகும். அவற்றுள் 416 புத்தகங்களின் இருப்பொன்று மிகுதியாகக் காணப்பட்டதுடன் கணக்காய்வினால் பல சந்தர்ப்பங்களில் சுட்டிக்காண்பித்த போதிலும் 2024 ஒக்டோபர் 21 வரை அந்த உதவிப் பத்திரப் புத்தகங்களை இரத்துச் செய்வதற்கோ அல்லது அகற்றப்பட்டு நீக்குவதற்கான நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2022 மீளாய்வாண்டில் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் அடிப்படையில் ஹோமியோபதி அபிவிருத்தி நிதியமொன்று ஸ்தாபிக்கப்பட்டு அந்த நிதியத்தில் பணத்தை சேகரிப்பதற்காக மக்கள் வங்கியில் நடைமுறைக் கணக்கொன்று திறந்து நன்கொடையாக ரூபா 1,180,245 தொகை சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த தொகையில் கட்டிடம் புனரமைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 575,000 மற்றும் இணையதளமொன்றை நிர்மாணிப்பதற் காக ரூபா 20,800 செலவினம் செய்யப்பட்டிருந் தது. இந்த வருமானம் ஹோமியோபதி அபிவிருத்தி நிதியத்தின் வருமானமாக காண்பிக் கப்படாமல் போதி சிகிச்சைக்காக கிடைத்த வருமானமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டதுடன் அந்தக் கணக்கின் கீழ் வைத்திய சபையின் இலக்கிடப்பட்ட பணிகளுக்கு | ஹோமியோபதி வைத்திய சபையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் கணக்காளர் ஒருவர் காணப்படாமை யினால் இறுதிக் கணக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வெளித் தரப்பினரைத் தொடர்புபடுத்தி இருந்தமையால் அந்தக் கணக்குகள் தயாரிக்கும் போது வழங்கப்பட்ட தரவுகள் அந்த தரப்பினரால் பெற்றுக் கொள்ளும் போது ஏற்பட்ட சிக்கல்களான நிலைமையின் அடிப்படையில் இது ஏற்பட்டிருந்ததுடன் எதிர்வரும் கணக்கு நடவடிக்கைகளின் போது இந்த நிலைமையை சரிசெய்யப்படுமென காண்பிக் கப்பட்டுள்ளது. | சபையின் இலக்கிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

புறம்பாக மருத்துவர்களின் நலன்புரி நடவடிக்கைளுக்காக ரூபா 345,000 தொகை சேகரிக்கப்பட்டு அதில் செலவினமாக ரூபா 297,500 செலவிடப்பட்டிருந்தது.

## 3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2016 இன் 10 ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியொன்றை ஆரம்பிப்பதற்காக 2008 ஆம் ஆண்டின் போது கட்டிடமொன்றை நிர்மாணித்து, 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 1,199,254 செலவிடப்பட்டு அதற்காக தளபாடங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் கற்கைப் பணிகளை ஆரம்பிப்பதற்குரிய சட்டரீதியான சட்டகத்தினை தயாரிக்காமை மற்றும் தேவையான மனித வளங்கள் காணப்படாமையின் காரணத்தால் 2024 ஒக்டோபர் 21 ஆந் திகதி வரையிலும் கற்கைப் பணிகளை ஆரம்பிக்க முடியாதிருந்தது. அதன் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நிலையான சொத்துக்கள் மற்றும் அதற்குரிய கட்டிடமொன்று 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டதுடன் கட்டிடம் அதன் நோக்கத்திற்கு மாறாக ஹோமியோபதி வைத்தியச் சபையின் அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. | மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்பதற்காக ஆரம்ப நடவடிக்கைகள் மற்றும் சட்ட ரீதியான வரைவொன்று தயாரிக்கப்படுவதுடன் மருத்துவக் கல்லூரிக்காக கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் எதிர்காலத்தில் உரிய முறையில் பயன்படுத்தப்படும். | நிர்மாணிக்கப் பட்டுள்ள கட்டிடம் மற்றும் கொள்வனவு செய்யப்பட்டுள்ள உபகரணங்களை உரிய நோக்கங்களுக்கு இடுபடுத்துவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசம்பர் 31இல் உள்ளவாறு சபையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 48 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான பதவியணியினர் 35 ஆகும். சபைக்காக அத்தியவசிய 02 மருத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் 09 மருந்துக் கலவையாளர்களில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2024 ஒக்டோபர் 21ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய சுற்றறிக்கையின் பிரகாரம் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அமைச்சரவை அலுவலகத்தின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |